# தாய்ப்பால்
# "தொடர் வளர்ச்சிக்கு ஒரு திறவுகோல்"



இந்த ஆண்டு (2016) சர்வதேச அரங்கில் 17 தொடர் வளர்ச்சிக்கான இலக்குகளுக்கு (SDGS) முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. 2030-ஆம் ஆண்டிற்குள் அனைத்து உலக நாடுகளும் 17 தொடர் வளர்ச்சி குறிக்கோள்களை அடைய ஒப்புகொண்டுள்ளதை முன்னிலையாக கொண்டு இந்த வருடத்தின் "உலக தாய்ப்பால் வாரம்" நடைபெற உள்ளன. இந்த தொடர் வளர்ச்சிக்கான குறிக்கோள்கள், மில்லினியம் வளர்ச்சி குறிக்கோள்களின் அடிப்படையிலும் இது உலக சுற்றுச்சுழல், பொருளாதாரம், சமத்துவம் போன்ற குறிப்பிட்ட பொருள்களை உள்ளடக்கியும் உள்ளன. இந்த புதிய தொடர் வளர்ச்சிக்கான இலக்குகள் (SDGS) வறுமையின் அடிப்படை காரணத்தை கண்டறிந்து அதை போக்கவும் மேலும் அனைத்து மக்களின் மேம்பாட்டிற்கும் உதவுகிறது. உலக தாய்ப்பால் ஊட்டுதல் வாரம் 2016 அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்படவும், தாய்ப்பால் கொடுப்பதை பாதுகாத்தல், மேமம்படுத்துதல், மற்றும் ஆதரித்தல் போன்ற செயல்கள் மூலம் தொடர் வளர்ச்சியை அடைய புதிய துவக்கத்தை உண்டாக்குகிறது.

## குறிக்கோள்கள்:-

1. இந்த புதிய நிலையான வளர்ச்சி திட்டங்களை அடைய, தாய்ப்பால் ஊட்டுதல் முக்கியத் துவத்தையும் மற்றும் குழந்தைக்கு சத்தான உணவு கொடுத்தல் முக்கியத்துவத்தையும் மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
2. பல அமைப்புகளை தாய்ப்பால் ஊட்டுதலை பாதுகாக்கவும், மேம்படுத்துதல் மற்றும் ஆதரிப்பதற்கும் செயலாற்ற கேட்டுக்கொள்ள வேண்டும்.
3. சிசுக்களுக்கும், குழந்தைகளுக்கும் தாய்ப்பால் ஊட்டுதலை மேன்மையடைய வழிகளையும் ஆராய்ந்து அனைத்து நிலைகளிலும் பல்வேறு நடவடிக்கைகளை ஏற்று திரட்ட வேண்டும்.
4. மக்களுக்கு தொடர் வளர்ச்சிக்கான இலக்குகளை தெரிவிப்பதுடன் சிசுக்களுக்கும், குழந்தைகளுக்கும் தாய்ப்பால் தருவதன் மூலம் எவ்வாறு இந்த இலக்குகளை அடையாளம் என்பதை தெரிவிக்க வேண்டும்.

Celebrating 25 Years bpni 1991-2016

IBFAN defending breastfeeding

# முன்னுரை

2016-ம் ஆண்டு தாய்ப்பால் ஊட்டுதலினால் வரும் உடல்நல, பொருளாதார பயன்களைப் பற்றிய புதிய ஆதாரங்களை லேன்சட் சீரிஸ் வெளியிடப்பட்டுள்ளது. தாய்ப்பால் ஊட்டுதலால் குழந்தைகள், பெண்கள் மற்றும் சமூகத்திற்கு குறுகிய மற்றும் நீண்டகால உடல்நல பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பயன்களை தோற்றுவிக்கிறது.

1. முதல் இலக்கு "வறுமையின்மை" தாய்ப்பால் இயற்கையானது எளிதில் கிடைக்ககூடியது சிசுக்களுக்கும், குழந்தைகளுக்கும் கிடைக்ககூடிய விலையற்ற சிறந்த உணவாகும்.
2. இரண்டாம் இலக்கு "பட்டினி தவிர்த்தல்"6 மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டும் கொடுத்து இரண்டு வயது வரை தாய்ப்பாலுடன் இணை உணவு கொடுத்தால் பசியை தவிர்க்க தேவையான சத்துணவு கிடைக்கவழியாகிறது.
3. மூன்றாம் இலக்கு" உடல் நலம் மற்றும் நல்வாழ்வு" தாய்ப்பால் ஊட்டுதல் சிசு மற்றும் குழந்தைகள் உடல்நல ஆரோக்கியம், மற்றும் உயிர் வாழ்வதற்கு பெரிதும் உதவுகிறது. தாய்ப்பால் ஊட்டுதல் தாய்க்கும் நலனிற்கும் நன்மை விளைவிக்கிறது.
4. நான்காம் இலக்கு "தரமான கல்வி" மற்றும் கூடுதல் உணவு கொடுத்தல் குழந்தையின் மனவளர்ச்சி மற்றும் அறிவாற்றல் மேம்பட குறிப்பிடத்தக்க அளவில் தாய்ப்பால் உதவுகிறது.
5. எட்டாம் இலக்கு பொருளதார வளர்ச்சிக்கு மற்றும் கௌரவமான பணி மற்றும் பணி செய்யும் பெண்கள், தாய்ப்பால் ஊட்டுதலை ஊக்குவிக்கவும், உரிய பாதுகாப்பும் அளித்திட வேண்டும்.
6. பத்தாம் இலக்கு ஏழை மற்றும் செல்வந்தர்களிடையேகாணப்படும் ஏற்றத்தாழ்வுகளையும் இடைவெளியை குறைக்கவேண்டும்.
7. பதிமூன்றாம் இலக்குபுவி வெப்பமாதல் மற்றும் காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விளைவுகள் மற்றும் பேரழிவுகளினால் குழந்தைகளுக்கு ஏற்படும் உடல்நலம் மற்றும் ஊட்டசத்து குறைபாடுகளிருந்து தாய்ப்பால் குழந்தைகளை பாதுகாக்கின்றது.

2030க்குள் இலக்குகளை அடைய லேன்செட் பத்திரிகை, தொடர் வளர்ச்சிக்கு, தாய்ப்பால் ஊட்டுதலை பாதுகாத்தல் மேம்படுத்தல் மற்றும் ஆதரித்தல் எவ்வளவு முக்கியம் என்பதை விளக்கியுள்ளது. மேலும் தாய்ப்பால் ஊட்டுதல் பல தொடர் வளர்ச்சி இலக்குகளை அடைய மிகவும் முக்கியம் என்பதை கீழ்காணும் கருத்துக்கள் மூலம் உணரலாம்.

## தாய்ப்பால் ஊட்டுதல் மற்றும் தொடர் வளர்ச்சிக்கான இலக்குகள்

### உயிர் வாழ்தல், சுகாதாரம் மற்றும் நல்வாழ்வு

லேன்செட் பத்திரிகையின் அறிக்கைப்படி, ஒரு வருடத்திற்கு தாய்ப்பால் ஊட்டுதல் மூலம் 8,20,000 உயிர்களை காப்பாற்றலாம். குறிப்பாக ஐந்து வயதிற்குப்பட்ட குழந்தைகளின் இறப்பை 15% குறைக்கிறது. தாய்ப்பால் கொடுப்பது மூன்றில் ஒரு பங்கு சுவாச நோய்களையும் இரண்டில் ஒரு பங்கு வயிற்று போக்கினையும் குறைக்கிறது. இந்தியாவில் தாய்ப்பால் ஊட்டுதலால் 1,56,000 குழந்தைகளின் இறப்புகளையும் 34,36,500 சுவாச கோளாறுகளையும் மற்றும் 39,00,000 வயிற்று போக்கினையும் குறைக்காலம்.

குறுகிய காலத்திற்கு தாய்ப்பால் கொடுத்த குழந்தையைவிட அதிக நாட்கள் தாய்ப்பால் கொடுத்த குழந்தை அதிக அறிவாற்றல் உள்ளதாக ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன இந்த உயர்வான நுண்ணறிவுத்திறன் மூலம், இந்தியா ஆண்டிற்கு 4300 கோடி ரூபாய் வருமானம் தேசிய வருமானத்தில் கூடுதலாக பெறலாம். சமீபத்திய ஆராய்ச்சியின்படி தாய்ப்பால் ஊட்டுதலால் குழந்தையின் கற்கும் திறன் மேம்படுதல் நாட்டின் வருமானம் மற்றும் நாட்டின் உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் தொடர் வளர்ச்சி இலக்குகளை எளிமையாக

கல்விதிறன் மேம்பாடு வறுமைஒழிப்பு மற்றும் ஏற்றத்தாழ்வற்ற சமுதாயம் போன்றவற்றை அடைய முடியும்.

தாய்ப்பால் ஊட்டுதலால் சினைப்பை மற்றும் மார்பக புற்றுநோய் வராமல் தடுக்கிறது. மார்பக புற்று நோயால் ஏற்படும் 20,000திற்கும் மேலான இறப்புகளை தாய்ப்பால் ஊட்டுதல் மூலம் தடுக்கலாம். இந்தியாவில் தாய்ப்பால் கொடுப்பதால் 7% மார்பக புற்று நோய்களை தடுக்காலம் என்ற மதிப்பீட்டின் படி 4915 இறப்புகளை நாம் தடுக்க முடியும் இதன் மூலம் தொடர் வளர்ச்சிக்கான நோயற்ற ஆரோக்கியமான வாழ்வு எனும் இலக்கினை அடையமுடியும



## சத்துணவு, உணவு பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழித்தல்



தாய்ப்பால் குழந்தைக்கு நீண்டகால ஆரோக்கியம் மற்றும் ஊட்டசத்தை கொடுக்கும் உணவாகும்.

தாய்ப்பால் விலையற்ற இயற்கையான சத்துணவு என்பதால ஒரு வகையில் வறுமையை ஒழிக்க கூடியதாகும். தொடர்ந்து தாய்ப்பால் கொடுப்பதால் 35% சக்கரை நோய் வராமல் தடுக்கலாம். ஆண்டுக்கு 9.5 லட்சம் புதிய சர்க்கரை நோய்கள் இந்தியாவில் பாதிக்கபடுவதாக மதிப்பிடப்படுகிறது. அனைத்து குழந்தைக்கும் தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் 33 லட்சம் பேருக்கு இந்நோய் வராமல் தடுக்கலாம். தாய்ப்பால் கொடுப்பதன் மூலம் அதிக எடை மற்றும் உடல்பருமன் அவை 26% குறைக்கலாம். இது இந்தியாவில் 5-17 வயதினரின் 20% உடல் பருமன் உள்ளவர்களில் பகுதியாகும். தாய்ப்பாலுக்கு மாற்றதக்க பவுடர் பால் உற்பத்தியாளர்கள் தாய்ப்பால் கொடுப்பதற்கு பெரும் தடையாக உள்ளனர். குறைந்த மற்றும் நடுத்தர வருவாயில் உள்ள நாடுகள் இதனால் 70 பில்லியன் டாலர் பணத்தை இழக்ககூடிய நிலை உள்ளது. அதிக வருமானம் வரும் நாடுகளில் அதிகபட்சமாக 230 பில்லியன் டாலர் பணத்தை இழக்க நேரிடுகிறது. எனவே தொடர்ந்து தாய்ப்பால் தருவதன் மூலம் இந்த இழப்பை ஈடு செய்து தொடர் வளர்ச்சிக்கான கல்வி, வறுமை, ஒழிப்பு பசியற்ற நிலைகளுக்கான இலக்குகளை அடையலாம்.

## சுற்றுச்சூழல் மற்றும் பருவநிலை மாற்றம



தாய்ப்பால் ஊட்டுதல், சுற்றுச்சுழலின் தூய்மையை நிலை நாட்டுவதற்கு பங்களிகிறது. மற்றும் இதை குழந்தைக்கு ஊட்டுதலில் எந்த மாசும், தேவையில்லாத பொதிகட்டுதலும் இல்லை. மற்றும் பால் பவுடர் ஆனது தயாரித்து விநியோகம் செய்ய நிறைய சக்தி மற்றும் பொருட்கள் தேவைபடுகிறது.

இந்தியாவில், மொத்த பால்பவுடர் தயாரிப்பு மற்றும் விற்பனையால் 111,226 டன் பசுமை வீடு வாயுக்கள் வெளியேற்றப்படுகிறது. சீனாவுடன் ஒப்பிடுகையில் அங்கு 224,9287 டன் ஆகும். இயற்கை இடர்பாடுகள் மற்றும் பேரிடர் காலங்களில் கூட சிசு நலத்தை காக்க மிக முக்கியமானது, தாய்ப்பால் தான். ஆதலால் தான் தாய்ப்பால் ஊட்டுதல் 17 தொடர் வளர்ச்சி இலக்கை அடைய முக்கியமான மைல்கல்.

## தாய்ப்பால் ஊட்டுதல் கொள்கை, மற்றும் பயிற்சிகளில் இந்தியாவின் நிலை

NFHS — 4 அறிக்கையின்படி இந்தியாவின் செயல்பாடு சராசரி அளவில் தான் உள்ளது.

முக்கிய குறியீடுகள்


- தாய்ப்பால் கொடுக்க தூண்டுதல் 50.5% மட்டுமே ஆனால் மருத்துவமனை பிரசவங்களின் எண்ணிக்கை 84.3% ஆகும்.

- தாய்ப்பால் மட்டும் தருதல் 57.0%

- கூடுதல் உணவு தருவது — 49.6%

தாய்ப்பால் கொடுப்பதன் நன்மைகள் தெரிந்தும், பிறக்கும் குழந்தைகளில் பாதி குழந்தைகளுக்கு தான் பிறந்த ஒரு மணி நேரத்திற்குள் தாய்ப்பால் தருகிறார்கள். மற்றும் 50% குழந்தைகளுக்கு தான் உலக சுகாதார நிறுவன பரிந்துரை படி 6 மாத காலத்திற்கு வரை தாய்ப்பால் மட்டும் தருகிறார்கள். உலக தாய்ப்பால் நடப்பு முனைப்பு இயக்கத்தின் சமீபத்திய ஆராய்ச்சியின் படி 2015-ல் இந்திய தாய்ப்பால் ஊட்டுதல் போன்ற இலக்குகளில் மிகவும் பின் தங்கியுள்ளது. உண்மையிலேயே தாய்மார்கள் தாய்ப்பால் கொடுப்பதற்கு நிறைய தடைகளை சந்திகின்றனர். ஏனெனில் அவர்கள் தவறான தகவல்கள் உடல் நல சேவை புரிபவர்களிடமிருந்து பெற்றிருக்கலாம். வீட்டில் உள்ளவர்களுக்கு கூட தாய்ப்பால் கொடுக்க தாய்மார்களை ஊக்குவிப்பதில்லை, மேலும் உரிய தாய்ப்பால் பற்றிய ஆலோசனை இல்லாததாலும், பால் பவுடர்கள் தயாரிக்கும் கம்பெனிகள் தங்கள் பொருட்களை தாய்ப்பாலுக்கு எதிராக சந்தை படுத்துவதாலும், குழந்தை பிறந்த சில நாட்களுக்குள்ளேயே வேலைக்கு செல்ல கட்டாயபடுத்தபடுவதாலும் இந்த சதவீதம் குறைவாக உள்ளது.

இந்த மாதிரியான தடைகளால் தான் தாய்மார்கள் குழந்தைகளுக்கு 6 மாத காலம் வரை தாய்ப்பால் மட்டுமே தர முடிவதில்லை. மேலும் தொடர்ந்து 2 வருடம் வரை உலக சுகாதார நிறுவனத்தின் ஆலோசனைப்படி தாய்ப்பால் தரமுடியவில்லை. ஆதலால் தாய்ப்பால் கொடுப்பது தாய்மார்களுக்கு உறுதுணையாக தேவைப்படுவதுடன் அது தொடர் வளர்ச்சி இலக்குகளை அடைய நமக்கும் உதவியாக இருக்கும்.



# முடிவுக்கான சான்று / தாய்ப்பால் சம்மந்தமான பிரத்யேக ஆய்வுகள் மற்றும் தொடர் வளர்ச்சி இலக்குகள்

**Infant feeding, poverty and human development. Beasley A and Amir AH. Int Breastfeeding J 2007, 2:14.** வறுமை மற்றும் மனித வளர்ச்சி இடையிலான உறவு குழந்தைகளின் சுகாதாரம் மற்றும் நல்வாழ்வை பேணி பாதுகாக்க வேண்டும் என்பதையே முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

6 மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டும் தருதல் மற்றும் 12 மாதம் வரை சத்துணவுடன் தாய்ப்பாலும் கொடுப்பதன் மூலம் ஒரு ஆண்டில் 13,01,000 இறப்புகளும் 13% வரை 5 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளின் மரணத்தை தடுக்க முடியும் என முன்மொழிந்துள்ளது.

வளரும் நாடுகளில் உள்ள வறுமையை தாய்ப்பால் பாதுகாக்கிறது என்று ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து இருக்கிறது என்றாலும் இவ்வறுமை நேரடியாகவும் மறைமுகமாகவும் அச்சுறுத்துகிறது.

பவுடர் பால் உற்பத்தியாளர்கள் அதிகளவில் உற்பத்தி செய்வதாலும் மற்றும் உழைக்கும் மகளிர் தாய்ப்பால் கொடுக்கும் உரிமையைப் பாதுகாக்கவும், சர்வதேச குறியீடு தாய்ப்பால் பதிலீடாகவின் கொள்கைகளை மற்றும் நோக்கத்தை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**Breastfeeding and breast cancer risk in India: A multicenter case-control study. Gajalakshmi V et al .Int J Cancer 2009, 125: 662-665.** நீண்டகால தாய்ப்பால் ஊட்டுதலின் மூலம் மார்பக புற்றுநோய் ஏற்படும் ஆபத்தைக் குறைக்கலாம் என்பதை மக்கள் ஆய்வுன் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

**Breastfeeding reduces breast cancer risk: A case-control study in North India. Babita et al. Int J Prev Med 2014, 5: 791-795.**

பெண்கள் மத்தியில் முகாம் நடத்தி தாய்ப்பால் கொடுப்பதின் முக்கியத்துவத்தை கூறுவதன் மூலம் மார்பக புற்றநோயைக் குறைக்கலாம்.

அதனால் தாய்ப்பால் கொடுப்பது பற்றிய விளக்கங்கள் மற்றும் விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவது இன்றைக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.



**Theory and social practice of agency in combining breastfeeding and employment: A qualitative study among health workers in New Delhi, India. Omer-Salim A et al. Women and Birth 2014, 27: 298-306.** தற்போதைய நிலையில் குடும்பத்தினரின் முழு ஒத்துழைப்புடன் தாய்ப்பால் ஊட்டுதலையும், வேலையையும் இணைந்து செய்ய ஊக்குவிக்க வேண்டும் என்று இந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

**Negotiating the tensions of having to attach and detach concurrently': A qualitative study on combining breastfeeding and employment in public education and health sectors in New Delhi, India. Omer-Salim A et al. Midwifery 2015, 31: 473-481.**

வேலைக்கு செல்லும் பெண்களுக்கு "பேறுகால பொருளுதவி" கொடுப்பது மட்டுமில்லாமல் தனிநபர் அளவிலும், குடும்ப அளவிலும், பணிமனை அளவிலும், ஆதரவு அளிப்பதன் மூலம் வேலை மற்றும் தாய்ப்பாலுட்டுதல் என்ற ஒருங்கிணைந்த நிலையை அடையலாம்.

**Report on Carbon Footprints Due to Milk Formula: A study from selected countries of the Asia- Pacific region. JP Dadhich, Julie Smith, Alessandro Iellamo, Adlina Suleiman. BPNI/IBFAN Asia 2015.**

ஆசியா மற்றும் பசுபிக் பகுதிகளில் நடத்தப்பட்ட பால்பவுடர் தயாரிப்பில் பசுமை வீட்டு வாயுக்கள் வெளியீடு என்ற ஆய்வின் முடிவில் பால்பவுடர் தயாரிப்பு, பசுமை வீட்டு வாயுக்களை வெளியிடும் காரணி என்பது நிரூபணமானது

# செயல்திட்டங்கள்

- ☛ பள்ளி மற்றும் கல்லூரிகளில் தொடர்வளர்ச்சி இலக்கு (SDG) அடைவதில் தாய்பால் ஊட்டுதலின் பங்கு பணிமனைகளை அமைப்பது .
- ☛ "உலக தாய்ப்பாலுாட்டுதல் வாரம்" என்ற தலைப்பில் கண்காட்சி/பொருட்காட்சி, ஓவிய பலகைகள், பட்டிமன்றம், பாடல், வாசகங்கள், புகைப்பட போட்டி போன்றவற்றை உள்ளூர் பள்ளி மற்றும் கல்லூரிகளில் நடத்துவது .
- ☛ உள்ளூர் பெண்கள், இளைஞர்கள் குழு, இளம்பிள்ளை மற்றும் குழந்தைகளுக்கு உணவூட்டுதல் (IYCF) ஆலோசகர் மற்ற நலஆர்வலர்கள் மூலம் தாய்ப்பால் அல்லாத உணவினால் ஏற்படும் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வு பிரச்சார பேரணி/தெரு நாடகங்களை நடத்துவது .
- ☛ பிறந்தவுடன் தாய்பால் துவங்குவது பற்றிய விவரங்களை மருத்துவமனை அல்லது சுற்றியுள்ள பகுதிகளில் சேகரித்து பகுத்தாய்வு செய்து முடிவுகளை மக்கள் நலத்துறையினரிடமோ, அமைச்சர்களிடமோ தெரிவிப்பது .
- ☛ சமூக ஊடகங்கள் மூலம் ஆரோக்கியமான தொடர் வளர்ச்சி இலக்குகளை அடைவதில் (SDG) தாய்ப்பாலின் பங்கு, தாய்ப்பால் பற்றிய கல்வி விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவது

## References


1. Transforming our world : the 2030 Agenda for Sustainable Development. WHA resolution 70/1. 2015?
2. Breastfeeding in the 21st century: epidemiology, mechanisms, and lifelong effect. http://www.thelancet.com/series/breastfeeding, Vol 387 January 30, 2016, 475-490
3. Why invest, and what it will take to improve breastfeeding practices?http://www.thelancet.com/series/breastfeeding, Vol 387 January 30, 2016, 491-504
4. Victora CG, Horta BL, de Mola CL et al. Association between breastfeeding and intelligence, educational attainment, and income at 30 years of age: a prospective birth cohort study from Brazil. Lancet 2015, 3: e199-e205.
5. Breast Cancer India. Statistics of breast cancer in India – global comparison. Available at: http://www.breastcancerindia.net/statistics/stat_global.html Accessed on 16th February, 2016
6. Diapedia. The burden of diabetes in India. Available at: http://www.diapedia.org/ introduction-to-diabetes-mellitus/1105045828/the-burden-of-diabetes-in-india#fn:3 Accessed on 15 February, 2016
7. OECD (2014). Obesity Update. Available at: http://www.oecd.org/health/Obesity-Update-2014.pdf Accessed on 15 February, 2016
8. Report on Carbon Footprints Due to Milk Formula: A study from selected countries of the Asia- Pacific region. BPNI/IBFANAsia2015.http://www.bpni.org/report/Carbon-Footprints-Due-to-Milk-Formula.pdf
9. NFHS 4 2015-16. National Family Health Survey, Ministry of Health & Family Welfare, Government of India. http://rchiips.org/nfhs/factsheet_nfhs-4.shtml
10. WBTi 2015-Arrested Development. 4th Assessment of India's Policy and programmes on infant and young child feeding. http://www.bpni.org/report/WBTi-India-Report-2015.pdf
11. WHO/UNICEF 2003. Global Strategy for Infant and young child feeding. Http://apps.who.int/iris/bitstream/10665/42590/1/9241562218.pdf?ua=1


**Resource : BPNI's WBW 2016 English Action Folder**


*Tamil Translation by :*

**Dr. S.Elango** MD, DPH, DIH
Professor & HOD
Department of Community Medicine
Chennai Medical College and Research Centre
Trichy, Tamilnadu.

*Project Co-ordinator :*

**Dr. S.Pradeepa** MD
Assistant Professor
Department of Community Medicine
Chennai Medical College and Research Centre
Trichy, Tamilnadu.



bpni putting child nutrition at the forefront of social change
IBFAN defending breastfeeding
WABA

Breastfeeding Promotion Network of India (BPNI)
Asia Regional Coordinating Office for IBFAN
South Asia Regional Focal Point for WABA

Address: BP-33, Pitampura, Delhi 110 034.
Tel: +91-11-27343608, 42683059.
Tel/Fax: +91-11-27343606. Email: bpni@bpni.org.
Website: www.bpni.org